மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்-ஊர் அமைப்பு (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்''
எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ''ஆம்'' என்க. (ஆம்)

மறுப்போர் ''இல்லை'' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச் சட்டமுன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

7. அறிவிப்புகள் (தொடர்ச்சி).

(ஆ) சம்பளங்கள் வழங்கல் (திருத்த) சட்ட முன்வடிவு, 1992 (ஆ. செ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 16/1992) பேரவையில் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

8. சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்).

(அ) சம்பளங்கள் வழங்கல், (திருத்த) சட்டமுன்வடிவு, 1992.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்) 1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 16/1992) மாண்புமிகு நிதி அமைச்சர்.

*மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

1992 ஏப்ரல் 27] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

''1992 ஆம் ஆண்டு சம்பளங்கள் வழங்கல் (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 16/1992) @ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்'' எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள், இங்கே இந்த மாமன்றத்திலே அமர்ந்துகொண்டு இருக்க கூடிய அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் 1991 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் முதல் தொகுதிப்படியாக 250 ரூபாய் வழங்குவதற்காக தமிழக அரசு எடுத்திருக்கின்ற, கொண்டு வந்திருக்கின்ற இந்த சட்ட திருத்தத்தை இங்கே நான் வரவேற்று உண்மையிலேயே அனைத்து உறுப்பினர்கள் சார்பாக வும் நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதே நேரத்தில் இன்னும் அரசு சில திருத்தங்களை கொண்டு வந்து சட்டமன்ற உறுப்பினர்களுடைய கஷ்டங்களை கொஞ்சம் பகிர்ந்துகொண்டிருக்கலாம். இங்கே 250 ரூபாய் என்பது உண்மையிலேயே ஒரு நாளைக்கு நாம் டாக்சிக்குக் கொடுத்தால் கூட ரூ. 500 கொடுத்தால்தான் டாக்சி வரும். இது அரை நாள் டாக்சி வாடகைக்குக் கூட போதாத ஒரு படிதான் இங்கே வழங்கப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சி. ஞானசேகரன், இது ஏற்கெனவே முடிவாகிவிட்டது. இப்போது அந்த 250 ரூபாயைக் கொடுப்பதற்கு மசோதா கொண்டு—வந்திருக்கிறார். அது வேண்டாம் என்கிற மாதிரி பேசுவது சரியல்ல. அது 250 ரூபாய் என்று ஏற்கனவே நாம் எல்லாம் பேசி ஆயிற்று. அந்த 250 ரூபாய் போதுமா போதாதா என்பதைப் பேசவேண்டாம். இப்போது 250 ரூபாய் கொண்டுவருவதற்கு என்று கொண்டு வந்திருக்கின்ற இந்த பில் சரியா, தப்பா என்று மட்டும் சொல் லுங்கள்.

திரு. சி. ஞானசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே அதற்கும் நன்றியை சொல்லிவிட்டேன். இருந்தாலும் இருக்கக்கூடிய குறைகளை நான் இந்த மாமன்றத் திலே உங்கள் வாயிலாகத்தான் சொல்ல முடியும். ஆகவே, இதை வருகின்ற காலகட்டத்திலாவது நிச்சயமாக நிதி அமைச்சர் அவர்கள் சற்று தாராள மனதோடு நிச்சயமாகக் கூட்டிக்கொடுப் பார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. அதே நேரத்தில் நிதி நெருக்கடி இருக்கக்கூடிய இந்த சூழ்நிலையில், நான் இரண்டு மூன்று முறை ஏற்கனவே இந்த மாமன்றத்தில் நிதி நெருக்கடி

@21-4-92 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

TRUTH ALONE TRIUMPHS

ஏற்படுத்தாத சில வேண்டுகோள்களை வைத்திருக்கிறேன். சட்டமன்ற உறுப்பினர்களுக்கு கொடுக்கின்ற இந்த 250 ரூபாய் தொகுதிபடியையும் நான் வரவேற்கிறேன். அதே நேரத்தில் உங்களுக்கு நிதிநெருக்கடி இல்லாத ஒரு சூழ்நிலையை—இப்போது ஒரு முனிசிபாலிட்டியிலே மீட்டிங் கிளார்க் என்று ஒருவர் இருக்கிறார்.......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதைக் கேளுங்கள். பில்-லினுடைய 'ஸ்கோப்'-ஐ விட்டுவிட்டுப் போகிறீர்கள். பில் ஸ்கோப் வந்து ஏற்கனவே ரூ. 250 என்பது சென்ற ஆண்டு முடிவு செய்தது. இப்போது பில் இன்ட்ரட்யூஸ் பண்ணி வந்திருக்கிறது. மாண்புமிகு நிதி அமைச்சர்.

பிற்பகல் 12-35

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏராளமான சட்ட முன்வடிவுகள் நிறைவேற வேண்டும். இங்கே என்ன கருத்துக்களைச் சொன்னாலும் இந்த பில்லில் ஏறப் போவதில்லை. ஆகவே, ஆதரிக்கிறீர்களா எதிர்க்கிறீர்களா என்று தான் சொல்ல வேண்டும். மாண்புமிகு உறுப்பினர்களைப் போன்றவர்கள் எதிர்ப்பார்கள் என்று எதிர்பார்த்தேன். (சிரிப்பு)

திரு. சி. ஞானசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதை உண்மையிலேயே ஆதரிக்கிறோம். அனைத்து உறுப்பினர்களும் ஆதரிக்கிறோம். ஆனால் 1991 செப்டம்பரிலிருந்து இதனை அமுலுக்குக் கொண்டு வருவதாக சொல்லியிருக்கிறீர்கள். இதை இன்னும் முன்கூட்டி நாங்கள் சட்டமன்ற உறுப்பினர்களாக வந்தோமே அந்த தேதியிலிருந்து அமுல் படுத்துவதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்ய வேண்டுமென்று மெத்த பணிவன்புடன் நான் உங்கள் வாயிலாக கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்கள் இங்கே கருத்துக்களை எடுத்துத் தெரிவித்தார்கள். தொகுதி படி சென்ற ஆண்டு வழங்கப்பட்டது. இந்த ஆண்டு என்னென்ன வழங்கப்பட்டிருக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே, தொகுதி படி வழங்குவதில் சட்டத் திருத்தம் செய்து சட்டத்திலே ஏற்றப்படவேண்டும். சட்ட வடிவம் கொண்டு வர வேண்டும். அதற்காக தான் இது இங்கே கொண்டு வரப்பட்டிருக்கிறது. இது நிறைவேற்றப்பட்டால், எந்த நாளையிலிருந்து தொகுதி படி வழங்குவோம் என்று சொன்னோமோ, ஒட்டுமொத்தமாக சேர்த்து எல்லா திங்களுக்கும் உறுப்பினர்களுக்கு தரப்படும். இது இல்லாமலும் உறுப்பினர்கள் தங்களுடைய காரியங்களை செய்கிறார்களா இல்லையா என்று

1992 ஏப்ரல் 27] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

தான் பார்த்துக்கொண்டிருந்தேன். ஆகவே, அந்தத் தொகுதி படி இல்லாமலேயே முடியும் என்பதைதான் எல்லா உறுப்பினர் களும் காட்டிக் கொண்டிருக்கிறார்கள். இருந்தாலும் சேர்த்து தொகுத்து வழங்கலாம் என்பதையும் எடுத்துச்சொல்லி, இப் போது வந்திருக்கிற செலவுகளுக்கு மாற்றங்கள் செய்கிறபோது அடுத்த சட்டமுன்வடிவுகள் வரும். இந்த சட்டமுன்வடிவு சென்ற ஆண்டு முடிவு செய்தது. இதை நிறைவேற்றித் தரும்படியாக நான் உறுப்பினர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி அமைச் சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படு கிறது.

ஏற்போர் ''ஆம்'' என்க. (ஆம்)
மறுப்போர் ''இல்லை'' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 5 முடிய திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 5 முடிய, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ''ஆம்'' என்க. (ஆம்)
மறுப்போர் ''இல்லை'' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன் வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவை யின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ''ஆம்'' என்க. (ஆம்)
மறுப்போர் ''இல்லை'' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.
மாண்புமிகு நிதி அமைச்சர்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன் வடிவு எண் 16/1992) நிறைவேற்றப் பெறவேண்டும்'' எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ''ஆம்'' என்க. (ஆம்)

மறுப்போர் ''இல்லை'' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

இந்து சமய அறநிலையக் கட்டளைகள் (திருத்த) சட்டமுன்வடிவு 1992,

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறநிலைக் கட்டளைகள் (திருத்த) சட்டமுன்வடிவு. (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 21/1992), மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்,

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறநிலைக் கட்டளைகள் (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 21/1992@ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்''
எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கே. செல்வராஜ்,

திரு. கே. செல்வராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. இந்து சமய அறநிலைக் கட்டளைகள் துறையில் ஒரு லட்சம் ரூபாயிலிருந்து 50 லட்சம் ரூபாய் வரை திருக்

@24-4-92 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது,